இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

பாராளுமன்றம்

# 1984 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகார சபை (திருத்தச்) சட்டம்

*[1984, ஓகத்து மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1984, ஓகத்து மாதம் 24 ந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 30* *தபாற் செலவு : சதம் 60*

## 1984 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகார சபை (திருத்தச்) சட்டம்

[1984, ஓகத்து மாதம் 23 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 32/84
1629

### 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகார சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்திலுல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 1984 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

**2.** ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்து நாலாம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறான, 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, இலங்கைத் துறைமுக அதிகாரசபைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவின் (ந) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1979 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(நந) இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே எவரேனும் ஆளினுல், குழுமத்தினுல், கூட்டிணைக்கப்பட்ட குழுவினுல், ஒழுங்கமைப்பினுல் அல்லது நிறுவனத்தினுல் துறைமுக அதிகார சபை அக்கறைகொண்டுள்ள எவரேனும் ஆளுக்கு, குழுமத்துக்கு, கூட்டிணைக்கப்பட்ட குழுவுக்கு, ஒழுங்கமைப்புக்கு அல்லது நிறுவனத்துக்கு கொடுக்கப்பட்ட ஏதேனும் கடனை மீளச் செலுத்துவதற்கு, அல்லது துறைமுக அதிகாரசபை அக்கறை கொண்டுள்ள எவரேனும் ஆளின், ஏதேனும் குழுமத்தின், கூட்டிணைக்கப்பட்ட குழுவின், ஒழுங்கமைப்பின் அல்லது நிறுவனத்தின் கடப்பாடான செய்கைக்கு நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் ஒருப்பாட்டுடன் கொடுக்கப்பட்ட அமைச்சரின் சம்மதத்துடன் உத்தரவாதமளித்தல்.".

ஏ 077542—2,800 (06/84)

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 150 ; (வெளிநாடு) ரூபா 200 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.